31.12.2024
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**PBAPP நீர் பற்றாக்குறையைத் தவிர்க்க 2025 வரை "AIDAP" திட்டத்தை நீட்டிக்கிறது**

- **ஆயிர் ஈத்தாம் அணையில் இருந்து எடுக்கப்படும் நீரின் அளவு 22 MLD ஆகக் குறைக்கப்படும்**

- **PBAPP, செபராங் பிறையில் இருந்து பினாங்கு தீவில் உள்ள ஆயிர் ஈத்தாம் விநியோகப் பகுதிக்கு 33 MLD வரை சுத்திகரிக்கப்பட்ட நீரைத் தொடர்ந்து பம்ப் செய்யும்.**

பினாங்கு, செவ்வாய், 31.12.2024: ஆயிர் ஈத்தாம் நகரப்புறம் மற்றும் ஃபார்லிம் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர் பற்றாக்குறையைத் தவிர்க்க PBAPP அதன் ஆயிர் ஈத்தாம் அணை செயல் திட்டத்தை (AIDAP) 2025 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தும்.

2025 AIDAP திட்டத்திற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

- ஆயிர் ஈத்தாம் அணையானது 61 ஆண்டுகளுக்கு முன்பு, 1963 இல் தொடங்கப்பட்டது. தெலுக் பஹாங் அணை (18,240 ML) மற்றும் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (86,400 ML) ஆகியவற்றின் அதிகபட்ச சேமிப்புத் திறன்களுடன் ஒப்பிடும்போது, அதன் அதிகபட்ச சேமிப்புத் திறன் 2,159 மில்லியன் லிட்டர் (ML) ஆகும். இது பெரிய அணை அல்ல.

- ஆயிர் ஈத்தாம் அணையின் பயன்படுத்தக்கூடிய கொள்ளளவு 30.12.2024 அன்று 76.7% ஆக இருந்தது. மழை மற்றும் / அல்லது நீர் விநியோக பொறியியல் தலையீடு இல்லாமல், ஆயிர் ஈத்தாம் அணையின் இருப்புக்கள் 2025ல் விரைவாகக் குறைந்துவிடும்.

- அனைத்துலக வானிலை அறிக்கைகள் 2025 இல் மற்றொரு சூடான மற்றும் வறண்ட எல் நினோ பருவச் சூழலைக் கணிக்கவில்லை என்றாலும், நீர் பற்றாக்குறையைத் தவிர்க்க "பாதுகாப்பாக இருப்பது" நல்லது.

எனவே, ஆயிர் ஈத்தாம்அணையின் விநியோகப் பகுதிகளில் உள்ள நீர்ப் பயனீட்டாளர்களுக்கு மன அமைதியை வழங்குவதற்கு பின்வரும் 3 முக்கிய AIDAP திட்ட நெறிமுறைகளை PBAPP தொடர்ந்து செயல்படுத்தும்:

1. ஆயிர் ஈத்தாம் அணையில் இருந்து 22 MLD வரை நீரை எடுத்தல்;

2. செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (WTP) இருந்து 33 MLD வரை சுத்திகரிக்கப்பட்ட நீரை ஆயிர் ஈத்தாம் அணை விநியோகப் பகுதிக்குச் செலுத்துதல்; மற்றும்

3. மற்ற 2 நீர் ஆதாரங்களிலிருந்து (Mains Stream and Tat's Stream) மூல நீர் கிடைப்பதன் அடிப்படையில் ஆயிர் ஈத்தாம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (WTP) சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை மேம்படுத்துதல்;

2024 ஆம் ஆண்டில், இந்த நெறிமுறைகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம், நீடித்த வெப்பம் மற்றும் வறண்ட எல் நினோ காலங்களில் தொடர்புடைய ஆயிர் ஈத்தாம் மற்றும் ஃபார்லிம் பகுதிகளில் பெரிய நீர் விநியோகப் பிரச்சனையைத் தவிர்ப்பதை உறுதி செய்கிறது.

**நீர் பயனீட்டாளரின் பங்களிப்பு**

ஆயிர் ஈத்தாம் அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதி (WCA) மழையால் மட்டுமே நிரப்பப்படும். எனவே, 2025 இல் ஆயிர் ஈத்தாம் அணையின் WCA இல் மழைப்பொழிவு ஏற்படுவது PBAPP அல்லது வேறு யாராது கட்டுப்பாட்டிலும் கிடையாது.

இருப்பினும், தினசரி நீர் பயன்பாடு ஆயிர் ஈத்தாம் அணையின் விநியோகப் பகுதிகளில் 28,948 பதிவு செய்யப்பட்டு நீர்ப் பயனீட்டாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2023 ஆம் ஆண்டில், பினாங்கில் தனிநபர் உள்நாட்டு நீர் பயன்பாடு 284 லிட்டர்/கபிதா/நாள் (LCD) ஆக இருந்தது. 2022 இல், தேசிய சராசரி 237 LCD அல்லது 16.5% குறைவாக இருந்தது. இதற்கிடையில், சிங்கப்பூர் 2023 ஆம் ஆண்டில் 141 LCD எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது.

மலேசியாவின் தேசிய சராசரி மற்றும் சிங்கப்பூரின் சராசரியாக, பினாங்கு வாழ் மக்கள் வீட்டில் அதிக நீரைப் பயன்படுத்தவதைக் காட்டுகின்றன.

அதிக தனிநபர் உள்நாட்டு பயன்பாடு விளைவுகளை ஏற்படுத்துகிறது. வறண்ட காலங்களில் ஒரு அணை மூலம் விநியோகம் செய்யக்கூடிய நீரை

விட, நீர்ப் பயனீட்டாளர் அதிக நீரைப் பயன்படுத்தும் போது, அதன் விளைவுகளில் ஒன்று நீர் நெருக்கடியின் அபாயம் அதிகமாகும். மற்றொரு எதிர்விளைவு, கூடுதல் நீர் விநியோகம் உள்கட்டமைப்பிற்கு அதிக செலவு ஏற்படும். இதனைத் தவிர்க்க முடியாத சூழலில் நீர்ப் பயனீட்டாளர் கணிசமாக கூடுதல் நீர் கட்டணங்கள் செலுத்த வித்திடும்.

2025 ஆம் ஆண்டில் பினாங்கு நீர்ப் பயனீட்டாளர் நீரைச் சிக்கனமாக பயன்படுத்துவது பாதுகாப்பாகவும் மற்றும் பகுத்தறிவாகவும் கருதப்படும். நீர் சேமிப்புக் குறிப்புகளுக்கு www.pba.com.my-ஐ வலம் வரவும்.

**தெலோக் பஹாங் அணை**

2025 ஆம் ஆண்டிற்கு முன்னோக்கிப் பார்க்கையில், தெலுக் பஹாங் அணையின் விநியோகப் பகுதிகளில் (தெலுக் பஹாங், பத்து பிரிங்கி, தஞ்சோங் பூங்கா, தஞ்சோங் தோகோங் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அதன் இருப்பு எதிர்பார்பதை விட குறைவாகவே உள்ளது.

30.12.2024 அன்று தெலுக் பஹாங் அணையின் திறன் 61.7% ஆக இருந்தது.

அதிர்ஷ்டவசமாக, தெலுக் பஹாங் அணை ஒரு பெரிய அணை ஆகும் . உண்மையான அளவின் அடிப்படையில், அதன் செயல்திறன் 18,240 ML அல்லது 844.8% ஆயிர் ஈத்தாம் அணை திறனின் 2,159 ML விட அதிகமாகும். எனினும், ஆயிர் ஈத்தாம் அணைக்கு ஆதரவாக AIDAP-ஐ PBAPP செயல்படுத்தலாம். ஆனால் நாங்கள் செபராங் பிறையில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை தெலுக் பஹாங் அணையின் விநியோகப் பகுதிக்கு பம்ப் செய்ய முடியாது.

எனவே, வரும் புத்தாண்டில் நீர் பயன்பாடு பற்றி நன்கு சிந்திக்கவும்.

2025 ஆம் ஆண்டில் பினாங்குக்கு சிறந்த சேவை வழங்க PBAPP தன்னால் இயன்றதை முயற்சிக்கும். இங்கு கிடைக்கக்கூடிய நீர் ஆதாரங்கள் நிலையானதாகப் பகிரப்படும் வகையில் நீரை விவேகமாகப் பயன்படுத்தும் பினாங்கு சமூகத்தின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் எங்கள் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

PBAPP சார்பாக, எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான மற்றும் வளமான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நன்றி.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

PBAPP ULANG TAHUN 25 ANNIVERSARY


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit

மின்னஞ்சல் : syarifah@pba.com.my